
# ஆத்ம ஜோதி



ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 20 | கீலக ஸ்ரீ ஆவணி மீ 1 உ [16-8-68] | சுடர் 10

## பொருளடக்கம்



| | |
|---|---|
| கபீர் அருள் வாக்கு | 259 |
| மனக்கோயில் | 260 |
| சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் | 261 |
| வேத நெறி | 265 |
| அருள் பெருக்கும் தவச்சாலை | 268 |
| சிவரஹசியம் | 273 |
| அபரோக்ஷானுபூதி | 276 |
| காற்றுள்ள போதே தூற்றிக்கொள் | 279 |
| சங்கரர் காட்டிய சைவ நெறி | 283 |
| சிவானந்தரின் அருளுரைகள் | 290 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்




ஆயுள் சந்தா 100-00
வருட சந்தா 3-00
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபீர் அருள் வாக்கு

ஆத்மானுபவத்தின் ஞானத்தைப் பற்றி யாராவது செய்தி கேட்டால், ஊமை வெல்லம் சாப்பிட்டு எந்த வாயால் அந்த ருசியைச் சொல்வான்? அப்படித்தான் பதில் சொல்ல இயலாது.

ஊமையின் செய்கையை ஊமையே அறிவான் போல, ஞானியின் இன்ப அனுபவத்தை ஞானியால்தான் அறிய முடியும்.

காகிதத்தில் எழுதப்படுவது உலகில் ஈடுபட்டு உழல்கிற ஜீவனுக்கு எழுதிவைத்த வெறும் காகித ஞானம் தான். ஆத்ம திருஷ்டியை எங்கே எழுதுவது? எங்கே பார்த்தாலும் அங்கே 'அன்பன்' இருக்கின்றான்.

எழுத்துக்குள் அடங்கும் பொருளும் அல்ல; அது பார்க்கும் பொருளும் அல்ல. மணப்பெண்ணும் ஆணும் சேர்ந்து விட்டனர். மற்ற மண விருந்தினர் ஒளியிழந்தனர். மனம் பிரம்மத்தில் லயித்து விட்டால் மற்றப் பொறியின்பங்களுக்கு மதிப்பு ஏது?

நிரம்பியவன் வெற்றிடம் என்று அறிகிறான். வெறுமை என்றிருந்தவன் நிரம்பி விட்டதாக உணருகிறான். இவை எல்லாம் அரைகுறை ஞானம். அனுபவம் பெற்றவன் வெறுமையாகவும் இல்லை, நிரம்பியும் இல்லை என்பான்.

சாது முறத்தின் தன்மை கொண்டவனாக இருத்தல் வேண்டும். சாரமானவற்றைப் பிடித்துக் கொண்டு உமியைப் பறக்க விட்டுவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக் கோயில்

(மகரிஷி சுத்தானந்தர்)

பூசலார் எம்பிரானுக்கு ஒரு பெரிய திருக்கோயில் கட்ட விரும்பினர்; மாந்தரிடம் பொருள் கேட்டார். ஒரு காசு கூடக் கிடைக்கவில்லை. 'நீயாவது கோயில் கட்டுவதாவது? என்றும் ஊரார் நகைத்தனர். அரனே! உனக்குச் செங்கற் கோயிலெழுப்பப் பணம் கிடைத்திலது. எனின் என்ன? இதோ, என் உளத்தில் உனக்குத் தங்கக் கோயில் எழுப்புகிறேன் என்று தொடங்கினர்.

வாய்மையென்னும் அடிப்படை கட்டினர். தூய்மையென்னும் மேல்வரிசை அமைத்தார். அன்பென்னும் சந்நிதி அமைத்தார். அறிவென்னும் கோபுரம் எழுப்பினர். இடைவிடாத் தியானம் என்னும் கருப்பக்கிரகம் அமைத்தார். 'இன்பக் கடவுளே இங்கெழுந்தருளுக' என்றார்.

அதே சமயத்தில் காடவராஜனும் காஞ்சியில் சிவன் கோயில் கட்டினன். அதில் லிங்கத்தை நாட்டும் நன்னாள் வந்தது. 'என் கோயிலிற் குடிகொள் இறைவனே' என்று வணங்கினன் காடவன். 'நில்! என் அன்பர் பூசலார் அன்பால் அமைத்த கோயிலில் இதோ எழுந்தருளுகிறோம்; பிறகு உனது கற்கோயிலில்' என்றான் இறைவன். அவ்வாறே பூசலார் உட்புகுந்தான். காடவன் பூசலாரிடம் ஓடிவந்து பணிந்தான். 'அடிகளே! தாங்கள் அமைத்த திருக்கோயில் எங்கே?' என்று வினவினன். 'இங்கே' என்று இதயத்தைக் காட்டினர் பூசலார். கல்லாற் கட்டிய கோயிலிலும் கருத்தாற் கட்டிய கோயிலில் இறைவன் எளிதில் எழுந்தருளுவான். பொன்னும் பொருளும் வேண்டுவதில்லை. அன்பும் ஆர்வமுங் கொண்டு உங்கள் சித்தத்தில் தியான மந்திரம் எழுப்புமின்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

(ஆசிரியர்)

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' எனக் கூறினர் பெரியோர். 'போதும் என்ற மனமே பொன்செயும் மருந்து' என்ற கருத்தும் அதனை வலியுறுத்துகின்றது. இதற்கும் மேலே சென்று பார்த்தால் ஓர் உயர்ந்த பொருள் இருப்பதைக் காணலாம். சித்தத்தை எதனால் நிறைக்க வேண்டும்? சிவத்தினால் நிறைக்க வேண்டும்? சித்தத்தைச் சிவத்தினால் நிறைத்துக் கொண்டவன், அவனே சிவம் ஆகின்றான்.

அரசனைத் தாங்கும் அரசுகட்டில் அரசனெனவே மதிக்கப்படும். அதுபோல் கொற்றந் தரும் முரசுகட்டில் கொற்றவை எனவே மதிக்கப்படும். இம்முறையே சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிந்தை சிவனெனவே மதிக்கப்படும். இதனைத் திருமூலர் பின்வரும் செய்யுளால் தெளிய வைக்கின்றார்.

சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தை யினுள்ளே சிவனிருந் தானன்றே.

'சித்தமிசை குடிகொண்ட அறிவான பரதெய்வமே'' என்பது தாயுமானவர் வாக்கு. பாற்கலமும் பால்போன்றே மதிக்கப்படும். மேலும் உயிருள்ள உடலும் உயிர்போன்றே மதிக்கப்படுகின்றது. உடல் இழிந்தது என்று எல்லோரும் ஒப்புக் கொள்வர். ஒன்பது துவாரங்களையுடையது. ஒன்பது துவாரங்களிலிருந்தும் அழுக்கே வெளியேறிக் கொண்டிருக்கின்றது. உடலின் வெளித்தோற்றம் அழகானதே. தலையணை உறையின் வெளிப்புறம்போல. உடலின் உள்ளே பார்த்தால் எத்தனை அழுக்கு? எத்தனை புழுக்கள்? இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலடியார் ஆசிரியர் 'பை மறியாப் பார்க்கப்படும்' என்று பேசுவார். அழகான தலையணை உறையை உள்வெளியாக வும் வெளி உள்ளாகவும் மாறிப் பார்க்கும்போது என்ன வித்தியாசத்தைக் காண்போமோ; அத்தகையதே இந்த உடலும்.

'புனைவனநீங்கில் புலால்புறத்திடுவது'

என்பது மணிமேகலை ஆசிரியர் கருத்து.

இத்தகைய உடலை ஓம்பவேண்டும்! மேலாக மதிக்க வேண்டும்! எதற்காக? அதனுள்ளே உயிர் இருப்பதனால். இரத்தினம் அதனுள்ளே இருக்கும்வரை பெட்டி இரத்தின மாகவே கருதப்படும். கருப்பஞ்சாறு எடுக்கும்வரை அது கரும்பேதான். சாறு எடுத்தபின் அதற்குப் பெயர் சக்கை. சக்கை நெருப்பில் வேகும்போது மகிழ்வார்களே தவிரக் கவலைப்படுவார் யாருமில்லை. அழுக்கு எரிந்து சாம்பலா னது என்று மிக மகிழ்வர், இத்தகைய தொடர்பே உடம்பு புக்கும் உயிருக்கும். உயிர் இருக்கும்வரை உடம்பு பேணப் பட வேண்டியதே. உடலைக் கொண்டு சீவன் சிவன் ஆகின் றான். சிவம் புறப்பட்டுவிட்டால் சவம்.

சித்தத்திலே சிவத்தை எழுந்தருளச் செய்வதற்கு ஒரு வழி பஞ்சாட்சர ஜெபமாகும். பஞ்சாட்சரத்தின் பொருள் நடராஜர் திருஉருவமாகும். வேதம் நான்கிலும் மெய்ப் பொருளாக விளங்குவது நமச்சிவாயமாகும். சிவம் வேறு ஐந்தெழுத்து வேறு அல்ல. சிவமே ஐந்தெழுத்து; ஐந்தெ ழுத்தே சிவம்.

''நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே''

''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாதொரு போதும் மறந்தறியேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது நாவுக்கரசர் வாக்கு. தைலதாரை போன்று இடைவிடாது நெஞ்சத்திலே நினைவார் சிவமாகவே மதிக்கப்படுவர். அத்தகைய சிவம் இருந்த உடலைச் சிவன் கோவிலாகவே மதித்துச் சமாதி வைத்துப் பூஜை செய்வர். சிவபூஜையினால் மார்க்கண்டேயரது உடல் சிவத்தன்மை பெற்றது போல பஞ்சாட்சர ஜெபத்தோடு உள்ளத்திலே சிவத்தை இடைவிடாது நினைப்பவருடைய மனமும் மணி லிங்கமாக மாறிவிடுகின்றது.

வெளிப் பூஜையினாலே உள்ளத்தை உருகச் செய்வது போல அகப் பூஜையினாலே அகத்தையே சிவமயமாகச் செய்யலாம். அகம் முழுவதும் சிவமயம் ஆகிவிட்டால் உலகம் முழுவதும் சிவமேயாகி விடும். உலகெங்குமே இறைவன் நிரம்பியிருக்கின்றான். எங்குமுள்ள இறைவனை எம்மால் காண முடிவதில்லை. உலகத்தைப் பார்க்கும்போது இறைவனைக் காண முடிவதில்லை. இறைவனைப் பார்க்கும்போது உலகத்தைக் காண முடிவதில்லை. எங்கும்சிவமயமாகப் பார்க்க வேண்டுமானால் சிந்தை சிவமயமாக வேண்டும்.

திருவருளால் உள்ளந் தெளியக் கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல், நிட்டைகிளத்தல் என்னும் முறையான் தெளியவல்ல நற்றவத்தார்க்குச் சிந்தையினுள்போ சிவன் எழுந்தருளி வெளிப்பட்டு வீற்றிருந்தருளுகின்றனன்.

''சிந்தனை நின்றனக்காக்கி''

என்பது திருவாசகம். அவனருளால்தான் அவன்தாள் வணங்க முடியும். தனது சிந்தனையை இறைவனே தனக்கு ஆக்கிக் கொண்டான் என மணிவாசகர் குறிப்பிடுகின்றார். இறைவனுடைய திருவருளிலே ஈடுபட்டவர்களுக்கு அவர்கள் நினைப்பது, பேசுவது ஆகிய எல்லாமே அவன் மயமாக இருக்கும். எப்படியாவது அவனோடு தொடர்புடைய பொருளையே சிந்திப்பதும் அதைப் பற்றியே பேசுவதுமாக இருப்பார்கள்.

சிந்தனை இறைவனுடைய நினைவாக ஆகிவிட்டால் உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளத்தில் உள்ள இருள் நீங்கி விடுகிறது. அகவிருள் நீங்குவது மாத்திரமன்று; அங்கே ஆண்டவனுடைய ஞானஒளி விளங்குகிறது. அந்த ஒளி உள்ளத்துள்ளே விளங்கும் பொழுது புறத்திலே தோன்றுகின்ற அத்தனையும் அந்த ஒளியின் விளைவாகத் தானே இருக்கும் இதனைச் சேக்கிழார்பெருமான்

'காரணபங் கயம்ஐந்தின் கடவுளர்தம் பதங்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகா ரணக்கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார்'

என்று கூறுகின்றார். பதங்களை எல்லாங் கடந்து விளங்கும் நாதாந்தத் தாரணையால் சிவத்தை அடைந்த திருஉள்ளத்தவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவராவர். புறக் கருவிகட்கும் அகக் கருவிகட்கும் காரணமாய், கருவிகட்கு எட்டாதனவாய் உள்ள நிலைகள் ஐந்து. அவைகளின் பீடங்கள் தாமரை போன்றிருக்கும். அவ்விடத்தில் முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் ஆகிய கடவுளர் வீற்றிருப்பர். இவ்வைந்து நிலைகளையுங் கடந்து ஒளிர்வது சிவசோதி. அச் சோதி நிலையையுங் கடந்து நிற்பது சுத்தசிவம். இச் சிவத்திடைச் சித்தத்தை வைத்தவர் பெருமை அளவிட முடியாதது.

தைலதாரை போல இறைவனை நினைப்பது தியானம். அதில் லயிப்பது தாரணை. தாரணை பலவிதம். நாத தத்துவங் கடந்த தாரணையில் சுத்தசிவம் விளங்குதலால் 'நாதாந்தத் தாரணையால் சிவத்தடைந்த' என்றார். சுத்த சிவத்தினிடம் சித்தம் வைப்பவர் சித்தர் ஆவர். ஆண்டவன் திருக்கூத்தால், சுத்தமாயை இயங்கி வேதமாகக் காரியப் படுவதால் 'ஆரண காரணக் கூத்து' என்றார்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் சிவமாகவே கருதி வழிபடுதற்குரியவராவர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத நெறி

(மகரிஷி சுத்தானந்தர்)

அக்னிமீளே புரோஹிதம்
யக்ஞஷ்ச தேவம்ருத்விஜம்
ஹோதாரம் ரத்ன தாதவம்

அறிவுக்கனலே, ஆதிப்பொருளே
வேள்வித்தலைவா, வேட்டோர்க்கெல்லாம்
இன்பத்திருக்களை ஈவாய்போற்றி!

இவ்வாறு வேதம் தொடங்குகிறது. வேதம் உலகின் ஆதிநூல். பரநாதப்பண்ணிசை. உள்ளான்ம யாழொலி. ஓங்காரக் குழலோசை. வேதவாக்குகள் தெய்வக் கனற் பொறிகள்.

வேதமே ஆதிநூலாம் வேதமே நீதிநூலாம்
வேதமே அறிவுச்சோலை வித்தகச் சித்தர் வாக்காம்
வேதமே ஆத்மசக்தி விழிதெழும் சங்கநாதம்
வேதமெய்ப் பொருளுணர்ந்து வித்தகராக வாழ்வோம்.

வேத விளக்கமே ஆகமம். வேதாகமங்கள் இறைநூல்கள். வேதம் தந்தை. ஆகமம் தாய் போலும். இவை உள்ளறிவின் அமரவூற்றுக்கள். ஒரே மின்சாரம் விளக்கில் ஒளிரும். விசிறியில் காற்று வீசும். அடுப்பிற் கனலும். குளிர்ப் பெட்டியில் குளிரும். வானொலியில் இசைக்கும். ஒரே எலெக்டானிக் சக்தி ஸ்புட்நிக்காகி மதிமண்டலத்திற்குப் பறக்கிறது. அணு சக்தியாகி நோய் தீர்க்கிறது. அணு குண்டாகி அழிவு செய்கிறது அணு யுகத்தை முன்னேற்றவும் அது பயனாகிறது. அதே மாதிரி ஒரே சுத்தாத்ம சக்தி உலகைப் பலவிதமாக விளையாட்டுகிறது. அதுவே தெய்வசக்தி. அதையே வேதம் ஒன்றே பலவாம் உயர்பொருள் என்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோ தேவ: ஸர்வ பூதேஷு கூட
ஸர்வவ்யாப ஸர்வ பூதாந்தராத்மா
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ
சாக்ஷிசேதா சேவயோ நிர்குணஞ்ச

ஒன்றே தெய்வம் உயிருள் உறைவதாம். எங்கும் நிறைவாம். இன்னுயிர் உளமாம். வினைமுதல் அதுவாம். விளங்கும் உள்ளுணர்வாம். நிர்க்குண சாட்சியாம். தற்பரம் அதுவே.

ருக், யஜுஸ், சாமம், அதர்வனம் என்பன நான்கு வேதங்கள். வேதத்தை நான்காகப் பிரித்தவர் வியாசபகவான். பைலசர், வைஸம்பாயனர், ஜைமினி, ஷுமந்து ஆகிய நால்வருக்கும் மேற்படி வேதங்களை வியாசர் முறையாகக் கற்பித்தார். வேதம் பரம்பரையாக வாய்ப்பாடம் சொல்லியே பிறகு எழுதப்பட்டு இன்று அச்சு நூலாயிருக்கிறது. யாரும் படிக்கலாம். ருக்வேதம் 21, யஜுர்வேதம் 109, சாமம் 1000, அதர்வணம் 50 சாகைகளைக் கொண்டது கர்ம காண்டம், உபாசனு காண்டம், ஞான காண்டம் என்று வேதம் மூன்று காண்டங்களானது. ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம் - இவை நான்கு உபவேதங்கள். வியாகரணம், சிக்ஷை, நிருக்தம், சந்தல், சோதிடம், கல்பம் என்பன ஆறு வேதாங்கங்களாம். கபிலரின் சாங்கியம், கௌதமர் நியாயம், கணுதரின் வைசேஷிகம், ஜைமினியின் கர்ம மீமாம்ஸம், பதஞ்சலியின் யோகம், வியாசரின் உத்தர மீமாம்ஸம் அல்லது வேதாந்தம் - இவை வேத விளக்கமான ஆறு தரிசனங்கள். வேதப் பசுவின் பால் போன்றது பகவத் கீதை.

வேதநெறி தழைத்தோங்க வந்தார் ஞானசம்பந்தர். மாணிக்கவாசகர் வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே என்றார். ஓங்காரத்துட்பொருளை ஐயன் எனக்கு அருளினுன் என்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தின் சாரமே காயத்திரி:-

ஓம் பூர்ப்புவஸ்ஸுவ: தத்சவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோன: ப்ரசோதயாத்.

இதுவே காயத்திரி மஹாமந்திரம். இதன் பொருளைச் சொல்லுகிறேன்.

விண் மண் அந்தரம் விரவிய ஓம் பரம்பொருள் அதுவே. மெய்யறிவின்பக் கதிரவன் உயர் பொருள் அதுவே. ஓம் சுத்த சக்தி. தியானிப்போம் அதன் சேதனச் சுடரை. புத்தியை அதுவே பொலிவுறத் தூண்டி பேரின் பத்தை நேரே தருமே.

வேதத் தேவதைகள் ஒரே கடவுளின் பல சக்தி விளக்கங்களே. வேதம் சமயோக சாதனமே. சூரியனும் சந்திரனும் போல எல்லாரும் சமநோக்குடன் நல்வழி செல்க. சேர்ந்து செல்க. உள்ளங் கலந்து ஒரு குலமாக வாழ்க என்பது வேத உபதேசம்.

ஸம் கச்சத்வம் ஸம் வதத்வம்
ஸம் ஓமனும்ஸி ஜானதாம் ஓம்

---

## சிவானந்தரின் அருளுரைகளில் சில

ஓ சாதகனே! நீ தேடுவதை அறிந்து கொண்ட பின் தேடுக. புகழ், ஆற்றல், செல்வம், சிற்றின்பத்துறை முதலியனவே தற்சீர்கேடும் சிறையுமாகிய கோட்டைக்கு நான்கு வாயில்கள். பணிபுரி, பணிபுரி, பணிபுரி. பணியே வழிபாடு; அதைக் கடவுளுக்கு உரிமையாக்குகிறது. இன்றைய இன்பப் பொருள் நாளைய இன்றியமையாத் தேவையாகிறது. துறவு உன்னை மூவுலகினதும் பேரரசனுய்ச் செய்யும். முயற்சி செய்யப்படாவிடின் ஓர் இலட்சியத்தை யடைதற்குரிய விருப்பம் அழிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணக் கட்டுரை — 12

# அருள் பெருக்கும் தவச்சாலை

(மு. சிவராசா)

டில்லியிலிருந்து 26.11.66 இரவு புகைவண்டியால் ரிஷிகேசம் புறப்பட்டோம். இரண்டு ஊர்களுக்கும் இடைத்தூரம் 180 மைல். டில்லியிலிருந்து காலை நேரத்தில் புறப்படும் பஸ்ஸில் போனால் அழகான இயற்கைக் காட்சிகளைக் காணலாம். பகற் பொழுதைப் பயணத்தில் கழிக்க விரும்பாத நாம் இரவு புகைவண்டியை நாடினோம். புகையிரத நிலயத்தில் ஒரே ஜன நெரிசல். அதிலும் நாம் போகவிருக்கும் வண்டியை எதிர் நோக்கியிருப்பவரே பெரும்பாலோர், என்பதை அறிந்தபோது திகைத்துப் போனோம். சீக்கியர்வணங்கும் 'குருநானக்' அவர்களின் ஜன்மதினம் மறுநாள். அப் புண்ணிய தினத்தை ஹரித்துவாரத்தில் கொண்டாடச் செல்லும் யாத்திரிகர்கள்தான் நிறைந்திருந்தனர். வண்டியில் முதல் வகுப்பு மூன்றும் வகுப்புப் படுக்கைகள் யாவும் முன்னரே ஒதுக்கப்பட்டு விட்டன. இருப்பதற்கு இடம் பிடிப்பதே பகீரதப் பிரயத்தனம் என்று தெரிந்தது. வேறு வழியில்லாததால் போட்டர்கள் தயவுடன் ஐந்து ரூபா செலவில் இரண்டுபேர் இருப்பதற்கு இடம் பிடித்துக் கொண்டோம். வண்டி எம்மை இழுத்துச் சென்றது. இரவை நாம் நால்வரும் தள்ளிக் கழித்தோம். காலை ஆறு மணிக்கு ஹரித்துவாரம் வந்து சேர்ந்தது வண்டி. ரிஷிகேஷம் இங்கிருந்து 15 மைல். ஜனங்கள் பெரும்பாலோர் இறங்கி விட்டனர். ஆயின் இந்த இடத்தைவிட்டு வண்டி புறப்படும் போது மணி ஒன்பது! பத்து மணிக்கு ரிஷிகேசம் புகையிரத நிலயத்தை யடைந்தோம்.

குதிரைவண்டி ஒன்றில் சிவானந்த ஆஸ்ரமம் சென்றோம். மலேயாவில் எஸ்டேட் ஒன்றில் வைத்தியராக இருந்து மக்கள் உடல்நோய் தீர்த்துக் கொண்டிருந்த டாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டர் குப்புசாமி, அவர்களின் உயிர்நோய் தீர்க்கப்படுவது அதனிலும் அவசியம் என உணர்ந்து மலேயாவை விட்டு நீங்கி இந்த இமய மலையை நாடி வந்தார். அவர் பெருங் கருணை இமயத்தின் அடிவாரத்தில் 1924ஆம் ஆண்டில் ஓர் ஆசிரமம் அமைக்கச் செய்தது. அன்றிலிருந்து இன்றுவரை ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு ஆன்ம ஈடேற்றப் பாதையைக் காட்டியுள்ளது இந்த ஆசிரமம். விஞ்ஞானமே உலகம், அதுவே சாசுவதம் என்று நம்பி வாழும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்ஸ், நோர்வே முதலிய பல்வேறு நாடுகளிலுமிருந்து கூட மக்கள் விஞ்ஞான வளர்ச்சியால் தாம் துய்த்துக் கொண்டிருந்த இன்பங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, அங்கு காணாத நிரந்தர இன்பத்தை நாடி இந்தத் தவச்சாலையை அடைந்தனர்; அடைகின்றனர். தாம் தேடி வந்த இன்பத்தைப் பெறவும் அவர்கள் தவறவில்லை. இமயத்தின் ஜோதி உலகெலாம் ஒளி வீசுகிறது என்றால் அது ஸ்ரீ சுவாமி சிவானந்த மஹரிஷியவர்களின் ஞான ஒளியையே குறிக்கும். இன்று சுவாமிகள் இறைவன் திருவடி நீழலில் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்ந்தாலும், அன்று அவர்கள் நாட்டிய திவ்விய ஜீவன சங்கம் என்ற மரம் இன்று பெரும் விருக்ஷமாகித் தன் கிளைகளை உலகெங்கும் பரப்பி தெய்வீக வாழ்வின் தண்ணிழலைக் காட்டி வருகிறது.

ஆசிரமத்தில் ஸ்ரீ சுவாமி பிரேமானந்தா அவர்கள் எங்களுக்கு ஓர் அறை ஒதுக்கித் தந்தார்கள். அங்கு நண்பர்கள் மூவரும் இருக்க, நான்மட்டும் ஆசிரமத்தைச் சுற்றி அங்கும் இங்குமாய் முன்பே தெரிந்திருந்த நண்பர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தேன். தேடிக் கொண்டே ஆசிரமத்தின் அமைப்பு முறையையும், சூழலையும் எண்ணி மயங்கி நின்ற வேளையில் ஆசிரம சந்நியாஸி ஒருவர் என்முன் சிரம் நிலம் தோய வீழ்ந்து வணங்கினார். நான் பதைபதைத்துப் போனேன். 'சிவ சிவா' என்று சொல்லிக் கொண்டே தலை நிமிர்த்திய அன்னார் காலடியில் வீழ்ந்தேன். 'நீங்கள் வருவீர்களெனக் கொழும்பிலிருந்து தகவல் வந்திருந்தது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் சுவாமி சிவசங்கரானந்தா அவர்கள். நானே அவ் விஷயத்தை அவர்களுக்கு அறிவிக்கத் தவறியமை என் குற்றம்.

சுவாமி சிவசங்கரானந்தா அவர்கள் பூர்வாச்சிரமத்தில் 'வடிவேல்' என்ற பெயரோடு, கொழும்பில் நீதி மன்றக் காரியாலயத்தில் 'டைப்பிஸ்ற்' ஆக வேலை பார்த்தவர். அப்போது அவர் கொழும்பு திவ்விய ஜீவன சங்கத்தின் செயலாளராக இருந்து அருந் தொண்டாற்றியவர். சங்கம் நடாத்தி வரும் வாராந்த பஜனை, யோகாசன வகுப்பு முதலியவை அவரின் ஜீவநாடிகளாய் இருந்தன. அளிபுண் அகத்துப் புறந்தோல் மூடி அன்னார் வாழ்க்கை புளியம்பழம் ஒத்து இருந்தது. ஒருநாள், தாம் ரிஷிகேசம் யாத்திரை போகப் போவதாய்த் தெரிவித்தார். வேலையிலிருந்து இளைப்பாறிக்கொண்டு போகும்படி நான் அவரை வேண்டினேன். அவர் போக்கை நன்கறிந்தவனாதலால். அவர் மறுத்துவிட்டார். 'லீவு' எடுத்துக் கொண்டு போகிறேன், 'இரண்டுமாதத்தில் வந்து விடுவேன்' என்றார். ஆனால் ரிஷிகேசம் போனவர் போனதுதான்! வடிவேல் இப்போது இல்லை சுவாமி சிவானந்தஜி மஹராஜிடம் சந்நியாஸம் வாங்கி சிவசங்கரானந்தா என்ற திருநாமத்தோடு ரிஷிகேசத்திலேயே தங்கி விட்டார். வருடம் நாலு ஆயிற்று. ஆளில் அதிக மாற்றமில்லை. உடையின் நிறம் மாறியிருந்தது. அவரது பணிவு மனப் பாங்கு இன்னும் சிறிது அதிகரித்திருந்தது. அவ்வளவுதான். மற்றப்படி பழைய அதே திவ்விய ஜீவன சங்கத் தொண்டர்தான். தமது சாதனைக்கு அவ்விடத்தில் போதிய வாய்ப்பு இருப்பதால் ரிஷிகேசத்தை விட்டு வெளியேற விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

அவர்களுடன் அறைக்கு வந்து நண்பர்களையும் அழைத்துக் கொண்டு கங்காதீரம் சென்றோம். நீர் ஓடுகிறதா, நிற்கிறதா என ஐயுறும் அளவுக்கு நிச்சலனம். நீரின் அடியில் நிலம் தெரிந்தது. அவ்வளவு நிர்மலம். மணி பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞென்றுக்கு மேலாயிருந்தது. நாங்கள் தீர்த்தமாட ஆயத்தமாஞேம். 'மூன்றுதரம் முங்கி எழுந்து வாருங்கள்; குளிர் தாங்க மாட்டீர்கள்' என்று சுவாமியவர்கள் எச்சரித்தார்கள். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்ஞற் பேசிக் கொண்டோம். 'நாம் என்ன அவ்வளவு கிழவர்களா? இந்த நீரின் குளிர்ச்சியைத் தாங்கமாட்டாத அளவு பலவீனர்களா' என்று முணுமுணுத்துக் கொண்டோம். ஆற்றில் இறங்கிஞேம். சூரிய நமஸ்காரம், கங்கை வணக்கம் செய்து தலையை நீரில் அமிழ்த்திஞேம். நால்வருக்கும் தனித்தனியான அனுபவம்! நண்பர் கனகசபை 'ஓ' என்று கத்திக் கொண்டே ஓடிஞர் கரைக்கு. உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு எனக்கு. எப்படியோ மூன்றுமுறை தலையை நீரில் அமிழ்த்தி முழுகி மூவரும் ஆற்றின் கரை ஏறிஞேம். அசுர சாதனைதான்! இன்னும் மூன்று தரம் தலையை அமிழ்த்தி முழுகியிருந்தால் வாழ்க்கையின் கரைக்கே போயிருப்போம். சற்று முன் சுவாமிகள் சொன்னதும், எமது அலட்சியமும், பின் நமது அனுபவமும் உலகின் போக்கை எடுத்துக் காட்டியது. ஆன்றோரும், அனுபவஸ்தரும் கூறியுள்ள அறவுரைகளையும், அறிவுரைகளையும் புறக்கணித்து நடப்பதும், அதஞல் அல்லற்பட்டுப் பின் கழிவிரக்கம் கொள்ளுவதும்தானே உலகின் போக்கு.

பிலாயில் எமது விரிவுரையாளர்களில் ஒருவர் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஸ்ரீ மூர்த்தி. அவர் ஒரு கதை சொல்லியிருந்தார். அவரது ஊரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் ரிஷிகேசம் போஞர். தை மாதம், கடும் குளிர். ஸ்நானஞ் செய்தற்குக் கங்கையில் இறங்கிஞர். நீரில் தலையை அமிழ்த்தியவர் மேலே தலையை எடுக்கவில்லை. அடியில் விழுந்து கிடந்தார். கரை நின்றவர்கள் எப்படியோ அவரை நீரிலிருந்து எடுத்துக் கரையில் போட்டார்கள். உடல் விறைத்துப் போயிருந்தது. உயிர் இருந்தமைக்கு எவ்வித அறிகுறியுமில்லை. 'கங்கையில் மூழ்கிக் கைலை யடைந்தார்' என்று அவரது ஈமைக் கிரியைகளை நடாத்தி உடலைச் சிதையின் மீது வைத்தனர். நெருப்பு எரியத் தொடங்கிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் 'ஆ.....ஊ.....' என்ற சத்தத்தோடு சிதையை விட்டிறங்கி ஓடத் தொடங்கினர். அவ்விதம் குளிரின் அனுபவத்தைக் கண்ட முதியவர் இன்னும் முதுகில் எரி காயங்களோடு தம் ஊரில் வசிப்பதாய் ஸ்ரீ மூர்த்தி சொன்னர். அப்போது அதை நம்ப மறுத்துக் கதை என்று கேட்டோம். இப்போது அது உண்மையாக இருக்குமென்று சத்தியம் செய்யவும் தயாராய் இருந்தோம்.

கங்கையிற் படிந்த நாங்கள் கரையில் எழுந்தருளியிருக்கும் கணபதியை வணங்கினேம். பின்னர் ஆசிரமம் வந்து பகலுணவு அருந்தினேம். ஸ்ரீ சுவாமிசிவானந்தசரஸ்வதியவர்கள் கடைசி நாட்களில் வதிந்த இடத்தையும் அவர்கள் உபயோகித்து வந்த பொருள்களையும் தரிசித்தோம். கங்கா தேவிபால் சுவாமிகள் கொண்டிருந்த பக்தியை அறிந்து வியந்தோம். அவர்களுக்கு எத்தனை அன்பிருந்தால் தமது அறையிலிருந்தே எந்நேரமும் கங்கையைப் பார்த்துக்கொண்டிருக்கும்படியான வசதியைச் செய்வித்திருப்பார்கள்! சுவாமியவர்கள் கொழும்பு வந்தபோது அடியேன் தரிசித்த கம்பீரமான உருவம் கண்முன் நின்று அந்த அறையின் ஒவ்வொரு பொருளிலும் பளிச்சிட்டது. கொழும்பு திவ்விய ஜீவன சங்கத்தில் சேர்ந்து பணிபுரியும் பேறு பெற்றதால் அல்லவா இத்துணைப் புண்ணியம் கிட்டிற்று என மகிழ்ந்தேன். சுவாமிகள் தூல உடம்பின்றி அருள் செய்யும் இன்று எமது உள்ளம் அடைந்த இன்ப உணர்வை நினைத்தபோது அவர்கள் தூல உடம்போடு இருந்து அருள்செய்த காலத்தில் வந்தவர்கள் அவர்களது அடிநிழலை விட்டகன்றிருக்க மனம் ஒப்பாது தான் என்பதைத் தெளிந்தோம். பக்குவ ஆன்மாக்களைமட்டுமா சுவாமிஜியவர்கள் ஆட்கொண்டார்கள்! சாதாரணமானவர்களையுமல்லவா பக்குவப்படுத்தி ஆட்கொண்டார்கள்!

---

திருமுருக கான செல்வர் கடையநல்லூர் திரு. எம். எ. மஜீத் அவர்கள் பாடிய

**திருமுருகன் செந்தமிழ்த் துதி**

வெளிவந்து விட்டது. விலை சதம் 50

**கிடைக்கும் இடம்: ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவரகசியம்

(மகரிஷி சுத்தானந்தர்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி

சிவாயநம. சி - சிவன், பதி. வா - வாலை, சக்தி, அருள். ய - உயிர், ஆன்மா, சீவன், பசு. ந - உயிரை மறைக்கும் திரோத சக்தி, மாயை. ம - மமதை, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள். ஆன்மா சிற்றறிவுடையது. அதை திரோத சக்தி மறைக்கிறது. மும்மலங்கள் பந்திக்கின்றன. பாசம் வலைபோட்டுப் பின்னி நிற்கிறது. மனமாயம் மேகம்போல் மறைக்கிறது. உயிர், எனது, யான், என்னுது, திருவருட் சக்தியையே நினைந்து, அருள்பெற்றுச் சிவனை அன்பு செய்து அறியவேண்டும்.

சிவன் சக்தி சீவன் செறுமல மாயை
அவஞ் சேர்ந்த பாச மலம்ஐந் தகலச்
சிவன் சக்தி தன்னுடன் சீவனர்சேர
அவம் சேர்ந்த பாசம் அணுகிதில்லாவே.

(திருமூலர்)

திரோதம், சுத்தம், அசுத்தம், ஆணவம், கன்மம் என்ற ஐந்து மாயமலங்களும் அகன்றால் சிவம் விளங்கும். சிவனுடைய பஞ்ச முகங்களையும், தியானித்தால் ஐந்து மாய மலங்களும் நீங்கும். தத்புருஷம் பிரணவஜோதி முகம். அது வேதப் பொருளை உணர்த்தும். அகோரம் மௌனப் பொலிவுடன் அருள் நிலவும், மலங்களை வாமதேவம் பரம சாந்தத்தை நல்கும். ஸத்யோஜாதம் யோக சித்தியையும், சகல சித்தியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும். ஈசானம் காந்த சக்தியும், ஞானக்கனலும், வீரத் திறனும் அளிக்கும். பஞ்சாட்சரத்தில் பஞ்சமுக சிவதரிச னம் எய்தும்.

6. அதிசூக்கும பஞ்சாட்சரம்.

நமச்சிவாய என்பது முதலில் ஆன்மாவின் பணிவைத் தெரிவித்துச் சிவனின் பெருமையை நினைக்கும் மந்திரம். சிவாயநம: என்பது முதலில் சிவனின் பெருமையை உணர்ந்து முற்றறிவனை அவனைச் சிற்றறிவான்மா சரண் புகுதலைக் குறிக்கும். சிவயசிவ என்பது அதிசூக்கும பஞ்சாட்சரம். இதில் முதலும் சிவம், முடிவும் சிவம். சிவம் போக்கு வரவற்ற, ஆதியந்தமற்ற நிறைபொருள். ஆன்மாவின் முதல்வனும் சிவன். அதை மாசறுத்துச் சுத்தான்மா ஆக்கி, அருளேற்றி, அறிவொளி துலக்கி ஆட்கொண்டு தன்மயமாக்கும் இறைவனும் சிவன். ஆன்மா முதலிலும் முடிவிலும் சிவச் சார்புடையது. எல்லாம் சிவனில் தொடங்கிச் சிவனில் முடியும் என்பதை அதிசூக்கும பஞ்சாட்சரம் குறிக்கும். இம் மந்திரத்தில் பாசத்திற்கும் மும்மலத்திற்கும் இடமில்லை. ஏனெனில் இது மலபரிபாகம் அடைந்த அருளாளர் ஜபிப்பது

சிவாயநமவெனச் சித்தம் ஒடுங்கி
அவாயம் அறவே அடிமையதாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே.
(திருமூலர்)

7. பிரணவ பஞ்சாட்சரம்

நான் செய்வது பிரணவ பஞ்சாட்சரமும், அதைத் தொடர்ந்த தசாட்சரமும் ஆகும். அது எனக்கு நல்ல சித்தியைத் தந்தது. ஓம் சிவ என்பதே பிரணவ பஞ்சாட்சரம். ஓம் என்பது அ, உ, ம் ஆகிய மூன்றெழுத்தின் தொகுதி. இம் மூன்றுடன் சிவ சேர்ந்து ஐந்தாகும். அ என்பது அவன், பதி. உ - உயிர், ம் - உலகம், பாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பொருள் முதல்வன் சிவன். உயிர் பாசம் நீங்கிப் பதியைக் கூடிச் சிவத்வம் அடைந்து இன்புறும் ஓங்காரமே பரம்பொருளின் வடிவம். ஆகாசம், பிரம்ம சரீரம் என்னும் உபநிஷதம். ஆகாசம் ஸப்ததன்மாத்திரை, ஒலிவடிவம். ஒலிகளின் மூலம் ஓம்; ஆதலால் ஓங்கார சிவத்யானம் யோகிகளுக்கு நலமாகும். சகலர் தூலசூக்கும பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும். பிரளயாகலர் தியானத்தால் அதிசூக்கும பஞ்சாட்சரத்தை உபாசிக்க வேண்டும். விஞ்ஞானகலர் மனோலயத்தால் உள்ளடங்கி, பிரணவ பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும். பிரணவ சித்தியாகிப் பரநாதப்பண் கேட்டதும், சிவோகம் என்று சமாதியால் உபாசிக்க வேண்டும். இதனால் சீவன் சிவத்வம் பெறும். தத் அது என்ற சிவம் ஆன்மாவை அருட்சக்தியால் முற்றிலும் கவர்ந்து தன்மயமாக்கும். த்வம் என்பதற்கு தன்மை என்ற பொருளாம். குருத்வம், சிஷ்யத்வம், ப்ரம்மத்வம், நரத்வம், தேவத்வம் என்று வருவதால் உணர்க. பசுத்வம் பாசமகன்று பரத்வம் ஆதலே சிவோகம் பாவனையின் பயனாகும். இந்தச் சித்தி துரிய நிலையில் எய்தும். இதற்குமேல் மகாதுரிய நிலை உண்டு. அதில் சிவமயம் பாவனை சித்திக்கும். சிவம் எங்கும் தானாக விளங்கும். அகண்ட ரஸம் புலனாகும். இந்த மூன்று பாவனைகளே படிப்படியாக யோக சித்தியும், ஞான சித்தியும், துரிய சித்தியும், மகாதுரிய சித்தியும் தந்து, சுத்தாத்மாவைச் சிவாத்மாவாக்கி, ஸர்வாத்ம சிவத்வமும் நல்கும். இந்த மூன்று சித்திக்கும் உகந்த மந்திரம் ஓம் சிவம், சிவோஹம் சிவமயம் என்பது. இது தசாட்சரி, பதின் எழுத்தது. பரம்பொருளின் உன்னதத் தன்மை சுத்தம், தூய்மை. தூய்மையே வாய்மை. சுத்தன் என்பது சிவன், விஷ்ணு, பிரம்மா, புத்தன், அருகன், பரமபிதா, அல்லா, ரசூல் ஆகிய எல்லாச் சமயக் கடவுளுக்கும் பொருத்தமான பெயர். சுத்தசிவம் உள்ள பொருள், உள்ளபடியிருக்கிறது. அதன் சக்தியே இச்சையாகவும், கிரியையாகவும், ஞானமாகவும் கிளர்ந்து, உலகில் அருளாடல் புரிகிறது; சிவம் தந்தை, அருட்சக்தி தாய், அதனாலேதான் சித்தாந்தம் சக்தி சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்த

# அபரோக்ஷானுபூதி

## (தன்னை அறிதல்)

106 பொய்யான பிரபஞ்சம் யாவும் சச்சிதானந்தமான ஆத்மனின் பிரதிபிம்பமென்றுணர்ந்து (யாவும் பிரம மயமெனக் கண்டு) இருத்தலே மகான்கள் போற்றும் துறவாகும். அதுவே பிரத்தியட்சமாய் விடுதலையைக் காட்டும்.

107 இன்பசாகர மோன வடிவுடன் ஒன்றித்து மௌனிக ளாக ஞானிகள் இருப்பர். மனம் வாக்கிறந்த நிலை யாம் இதனை யோகிகள் மாத்திரம் எய்துவர்.

108-109 எதனிடத்திருந்து வாக்குதயமாகின்றதோ அதனை வாக்கால் வழுத்த வல்லார் யாருளர்? அன்றிப் பிர பஞ்சத்தைத் தானும் வாக்கால் வரையறுத்து விளக்கி விடலாம் — என்னின் அஃதும் சாலாது. அதுவும் அநிர் வசனியமாகும். ஏனெனில் பிரமமும் பிரபஞ்சமும் பிரிக்கக் கூடியவையல்ல. வாய்ப் பேச்சடக்கி மௌன மாகும் வண்ணம் மூடர்களுக்கே ஞானிகள் விதித்தனர்.

---

முன் பக்கத் தொடர்

மாக, அம்மையப்பனாக, மங்கைபாகனாக இறைவனை வழி படுகிறது. சிவம் சுத்த ஜோதி, அதன் சக்திக் கதிர்களே உலகாக விளையாடுகின்றன. அதனால் இறைவனைச் சுத்தசக்தி யாகப்பாவிக்கிறோம். ஓம் சுத்தசக்தி இயல்பான தத்துவவிள க்கம். இதனுடன் தசாட்சரத்தையும் சேர்த்துப் பூர்ண சிவர கசிய மந்திரத்தை மகாதுரிய சித்தர்கள் உபாசிக்கத் தகும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110 தொடக்கமும் நிலையும் முடிவும் இல்லாமல் இந்த அண்டம் எதனுல் என்றும் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ அதுவே அவ் வெறு வெளி ஏகாந்தமாகும். (பரவெளி)

111 அத்துவிதப் பொருளாயும் அகண்ட பரிபூரணனந்தமாயும் இருக்கும் பிரமம் சங்கற்ப மாத்திரையாய் கணப்பொழுதினுள் அண்ட சராசரம் அனைத்தையும் ஆக்கி அளித்துத் துடைக்கின்றமையால் அது காலம் என்று அழைக்கப்படுகிறது.

112 சுயமாகவும் இடையீடின்றியும் சிவத்தியானம் நடைபெறச் சாதகமான ஆசனத்தை அறிந்து கடைப் பிடித்ததோடு சிவத்தியானத்துக்கு இடையூறுகவுள மற்ற ஆசனங்களை (உடல் நிலைகள்)த் தவிர்த்துக் கொள்ளுதலும் வேண்டும்.

113 எது பிரபஞ்சத் தோற்றத்திற்கு மூலமாகவும் பின் ஆதாரமாகவும் உளதோ, எது எக்காலத்திலேனும் மாற்ற முருததோ, எதனில் ஞானிகள் முற்ருக மூழ்கி விடுகின்றனரோ அதுவே சித்தாசனம் (பிரமம்) எனப்படும்.

114 நிலைத்துள யாவுக்கும் மூலமாக உளது எதுவோ, எதனிடத்து மனம் சென்றடங்கி மறைகின்றதோ அதுவே இராஜ மொழிகளால் கையாளப்படும் மூல பந்த மென்னும் ஆசனமாகும். அதனையே என்றும் அசட்டாளத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

115 தேகாங்கங்களின் சமநிலை யென்பது பார்க்குமிடமெங்கும் நிறைந்துள்ள பரிபூரண வஸ்துவாகிய சிவத்தில் மூழ்கி யிருத்தலேயாம். காய்ந்த விறகு கட்டைபோல் உடலை நீட்டியிருத்தல் தேகசாம்யமாகாது.

116 பதார்த்தங்களைப் பாராது பார்ப்பதெல்லாம் சிவமாக (பரமாக) பார்த்திருத்தலே மேலான தரிசனம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசி நுனியில் வெறுமனே நாட்டத்தை வைத்திருத்தல் மட்டும் தரிசனமாகாது.

117 காண்பான், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் எதனில் ஒன்ருகி விடுகின்றனவோ அதனையே ஒருவன் தரிசிக்க வேண்டும். நாசி நுனியை யன்று.

118 சித்தி விருத்தி நிலைகள் யாவையும் பிரமமே என்று கருதியவராய் என்றும் பிரமத்தில் அடங்கியிருத்தலே பிராணுயாமம் ஆகும்.

119-120 பிரபஞ்சம் பொய்யாகு மென்பது இரேசகமாகவும் 'அகம் பிரமாஸ்மி' என்பது பூரகமாகவும் இவ்வெண்ணத்தில் நிலைத்திருத்தல் கும்பகமாகவும் காண்பதே உண்மையை உணர்ந்த ஞானிகள் கடைப்பிடிக்கும் பிராணுயாமமாகும். ஏனையவெல்லாம் மூக்கினை வருத்துதலேயாம்.

---

## சிவானந்தரின் அருளுரைகளில் சில

கண்டனம் உனது மனவுறுதியில்லாத குணங்களைக் காட்டி, தொல்லைக்கும் தோல்விக்கும் மாருக எச்சரிக்கை செய்கிறது. மரணம் ஒரு சிறந்த நிலைமைக்கு மாற்றமே. ஆகையால் மரணத்துக்கு அஞ்சாதே. ஒவ்வொரு தவறும் தனது சொந்தப் படிப்பினையைக் கொணர்கிறது. தவறே உன் மிகச் சிறந்த ஆசிரியன். எல்லாத் தொல்லையும், துன்பமும் நன்மையின் மறைவான விதைகளை அடக்கிக்கொண்டிருக்கின்றன. கடவுளனுபூதி யடைவதற்குத் தன் முயற்சி அத்தியாவசியமானது. ஆன்மீக முயற்சி தொடர்ச்சியாகப் புதுப்பித்துப் பொறுமையாக விடாது முயல வேண்டும். சவரக் கத்தி நுனியில் நடப்பது போன்று ஆன்மீக நெறி கடினமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

(செல்வி. த. பூங்கொடி)

உடலானும், உள்ளத்தானும், உயிரானும் உயர்ந்த மனிதனை நோக்கியே இவ்வாக்கியம் கட்டளை இடுகின்றது. விலங்கியல்பினின்றும் மாறிய மனிதன் சூழ்நிலையால் மீண்டும் விலங்காகி வாழ்ந்து விடலாகாது என்னுமுயர் நோக்கத்தால் இவ்வரிய போதனையை வாழ்வாங்கு வாழ்ந்தோர் விட்டுச் சென்றனர். இதற்கு வெளிப்படையான கருத்தை விட உயிர்ப் பொருளாய கருத்தொன்றுளது. இங்கே காற்று என்றது மூச்சுக் காற்றை. அதாவது பிராணனை. பிராணனெனினும் உயிரெனினும் ஒக்கும். தூற்றிக்கொள் என்றது வினைமாசுகளை அகற்றிக் கொள் என்று பொருள்படும். எனவே இதன் தெளிந்த பொருள் நிலையில்லாத உடலை விட்டு உனதுஉயிரானது ஓடாமுன்னம், இந்தஉடலாற்பெறப்படும், நிலையான ஆன்ம லாபத்தைத் தேடிக் கொள் என்பதாம்.

நிலையிலா உடலைத் தாங்கிய மனிதன் உடலின்பம், அறிவின்பம், ஆத்மீக இன்பம் என்ற மூவகை இன்பங்களையும் அனுபவிக்கும் உரிமையுள்ளவனாகின்றான். இவ்வின்பங்கள் முறையே ஒன்றினுமொன்று சிறப்புடைத்து. நிலையிலாவுடலாற் பெறப்படுமின்பமும் நிலையில்லாதது என்பதை அறிவால் உணர்ந்த விடத்து அவன் ஆத்மீக இன்பத்தில் நிலை பெறுகின்றான். ஆத்மீக இன்பத்தைச் சுவைத்து வாழ்ந்த அவதார புருஷர்களே இதற்குச் சான்றாவர். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஆத்மீக வாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளனர். அன்னோர் தம் ஆத்மசக்தி, அருளாட்சி அகில உலகமும் ஒளி விடுகின்றது. உதாரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர், சங்கரர் போன்றோர் வாழ்க்கைச் சரிதம் இவ்வுண்மையை மெய்ப்பிக்கும்.

அழியுந் தன்மையதாய இவ்வுடலைப் பாவனை செய்யுமுகத்தான் நாம் இருவேறு நிலைகளை அடைதல் கூடும். ஒன்று இறவாப் பெருநிலை. மற்றது பிறப்பிறப்பிற்கேதுவான துயர்நிலை. உதாரணமாக ஒரு மலரை எடுத்துக் கொண்டால், அந்த மலர் இறைவனுக்குச் சாத்தப்படுமாயின் தெய்வ நிலையையும், தலையிலே சூடி எறிந்தவிடத்துப் பயன்படாத் தன்மையையும் அடையும். இந்த இருநிலைகளுக்கும் அதனுடைய பாவனையே ஏது. இவ்வாற்றான் ஓரளவு உண்மையை உணர்ந்த நாம் இறவாப் பெருநிலையடையும் அருள்நெறி அவாவி, எமது உடலாகிய மலரை ஆண்டவனுக்கே அர்ப்பணித்து விட வேண்டும். செய்கின்ற ஒவ்வொரு கருமத்தையும் ஆண்டவனுக்கென்றே செய்து விடல் வேண்டும். இங்ஙனம் செய்தவிடத்து இது இறைபணியாகின்றது. இறைபணி நின்றவிடத்து ஆன்மாவைப் பற்றி நிற்கும் வினை மாசுகள் தாமே அகன்று விடுகின்றன. எனவே ஆன்மா இவ்வுடலோடு கூடிய நிலையிலேயே இறைமை எய்துகின்றது. அதாவது சீவன்முத்த நிலை அடைகின்றது. இதுவே உயிர்க் காற்றனது உடலை விட்டு நீங்காமுன்னம் வினைமாசுகளைத் தூற்றிக்கொண்ட நிலையாகும்.

இங்ஙனமாக உலகியலில் வாழ்தல் எங்ஙனம் என்ற வினா எழுதற்கு முன்பே, ஐம்புல வேட்கையகத்தடக்கி அருநெறிப் படர்ந்த நாவரசர் தம் நல்வாக்கு எமக்கு விடையளித்து விட்டது. ''அருந்துணையை அல்லல் தீர்க்கு மருமருந்தை - நினைய வல்லார்க்கு என்றும் பெருந்துணை'' என்று கூறுமிடத்து குறிப்பாக நினைய வல்லார்க்கு என்று குறிப்பிடுகின்றார். எங்கே என்னுமுன் ''பொருந்தணைமேல் மடவாரொடும் வரும்பயனைப் பெரும்போகமாற்றி நினைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லார்க்கு என்றும் பெருந் துணையாக இருப்பவன் இறைவன் என விளக்கமும் தருகின்றார் என்றால் உலகியலில் வாழ்பவர்கள் ஆத்மசுகம் பெற முடியாது என்று கூறமுடியுமா? மேலும் இறைபணி நின்று செய்த காரியமாதலால் வினைமாசு இல்லை என்பதையும், உலகியலிலிருந்துகொண்டே பரமார்த்திகப் பெருவாழ்வு பெற்று வாழலாமென்பதையும் வலியுறுத்துவாராகி பொருந்தணை மேல் வரும் இன்பம் - பெரும் போகம்'' என ஆன்மா இறைவனோடு கூடிய இன்பத்தை நினைவுபடுத்தினர்.

உலகியலிலிருந்து கொண்டே சிவனருட் பேறு ஒன்றே இலக்காகி வாழ்ந்தவர்கள் பெரிய புராணம் கூறும் சிவனடியார்கள். அவர்கள் வாழ்க்கையைத் தமக்கென்று வாழவில்லை. உலகிற்கென்றே வாழ்ந்தவர்கள். இறைபணிக்காக எந்த நிலையிலும், எதையும் இழக்கவும் செய்யவும் தயாராக இருந்தனர். சிறப்பாக இயற்பகையார் தம்மினிய மனைவியாரைச் சிவனடியாருக்குக் கொடுக்க மறுக்கவில்லை. சிறுத்தொண்டர் தமது ஒப்பற்ற ஒரு தனிமகவை வாளாலரிந்து கறி சமைத்துச் சிவனடியாரை உண்பித்து மகிழப் பின்னிற்கவில்லை. மேலும் சிறப்பாக அப்பூதியடிகள் காரைக்காலம்மையார் தம் வாழ்வும் போற்றற்குரியன. இறைபணி தவிர வேறுபணி யொன்றறியாத இச் சிவனருட் செல்வர்களின் சிறப்புகளையெல்லாம் பெரிய புராணம் தொகுத்துக் கூறுகின்றது. அன்னார் தம் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கு மிடத்துக் ''காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்'' என்ற போதனைக்கு விளக்கமாக வாழ்ந்தவர் என்ற உண்மை புலனாகும்.

சாதாரணமாக எமது வாழ்க்கையில் சுதந்திரமாக வாழ விரும்பும் ஒருவர் தமது பொறுப்புகளை யெல்லாம் வேறொருவரிடம் ஒப்புவித்து விடுகின்றார். இங்ஙனம் ஒப்புவித்த பின்பு அதனால் ஏற்படும் நயமோ நட்டமோ அவரைப் பாதிப்பதில்லை. இதே பாங்கில் பரமார்த்திகப் பெருநிலையில் வாழ்ந்த மணிவாசகர் தம்மை முற்றிலும் ஆண்டவனுக்கே ஒப்புவித்துவிட்டு என்ன கூறுகின்றார்? 'நன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே''
என்று வினவெழுப்பி வாழாவிருக்கின்றார். இவ்வாற்றான்
மணிவாசகர் தம் மணிவாக்கை ஊன்றீ நோக்குமிடத்து
அன்னார் எம்மையெல்லாம் பார்த்து நீங்களும் உங்கள் உட
மைகளையெல்லாம் ஆண்டவனிடம் ஒப்புவித்து விடுவீர்களா
னால் என்னைப் போல் சுதந்தரமாக வாழ்ந்து என்றும் நிலை
யான இன்பத்தை அடைவீர்கள் என்று கூறுமாற் கூறுமா
றன்றோ தோன்றுகின்றது.

இந்த உடலானது ஆண்டவனுக்குத் தொண்டு செய்
வதற்கென்றே கொடுக்கப்பட்டது. இத்தகைய உடலானது
பெறுதற்கரியதும் அழியுந் தன்மையதுமாகும். இவ்வுண்
மையை உணர்ந்த நாம் இவ்வுடலை விட்டு எமது உயிர்க் காற்றா
னது ஓடாமுன்னம் செய்யதற்கரிய சாதனைகளைச் செய்து பெறு
தற்கரியநிலைப்பொருளான ஆன்மலாபத்தை தேடிக்கொள்ள
வேண்டும். எமதுசாதனைக்குரியநெறிஇதுதானென்றுபலவிட
ங்களிலும் பகரப்பட்டுள்ளன. இதோ நாவரசரும் கூறுகின்
றார். காயமே கோயில் இந்த உடல்தான் இறைவன்
ஆலயம். இதற்குத் தொண்டு செய்யும் அடிமை யாரென்
றால் அது மனந்தான். இங்கே எழுந்தருளியிருக்கும் இறை
வன் யாரென்றால் தூய மனத்தின் ஒளி. என இவ்வாறு
பாவனை செய்து ஈசனுற்குப் பூசனை செய்வோம் என்று வழி
வகை கூறிப் போந்தார். இந்த உண்மைகளை எல்லாம்
மனதிற் கொண்டு நாமும் வாழ்வாங்கு வாழ்ந்து எமது
வினை மாசுகளை யெல்லாம் தூற்றிக் கொள்ள இறைவன்
இன்னருள் புரிவாராக.

---

# சிவானந்தரின் அருளுரைகள்

யார் துணிவுகொண்டு செயலாற்றுகிறார்களோ, அவர்
களுக்குச் சித்தி அடிக்கடி விளைகிறது. அது கோழைகளுக்கு
அரிதாகவே விளைகிறது. நீ நல்லவனாயிருப்பின் முழுவுல
கும் உனக்கு நல்லதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரர் காட்டிய சைவ நெறி

(யாழ்ப்பாணம், நல்லூர், கணபதீசுவர குருகுலத்தில், ஸ்ரீ லங்கா குருபிரம்ம வித்தியார்த்தி சபையினர், 1-5-68ல், நடத்திய சங்கர ஜயந்தி விழாவில், பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள் பேசியவற்றின் சாரம்.)

சங்கரர் என்பது ஆன்மாக்களுக்குச் சுகம் செய்பவர் என்ற கருத்தில், சிவபிரானுக்கு உரிய திருப்பெயர். அத் திருப்பெயரைத் தாங்கிய ஓர் அவதார புருஷர் இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன், பரத கண்டத்தில் 'காலடி' என்னும் கிராமத்தில் சிவகுரு என்னும் அந்தணரும் அவரது பத்தினி ஆர்யாம்பிகையும் செய்த தவப்பயனுக அவதரித்தார். சித்திரை மாசத்துச் சுக்கில பஞ்சமியும் திருவாதிரையும் பொருந்தியது அவர் தம் அவதார தினமாகும். சர்வ லோகைக நாயகராகிய சிவபரம் பொருளே உலக நன்மையின் பொருட்டு ஆதி சங்கராச்சாரியராக அவதரித்தார் என்பது வரலாறு. அதனைக் குறித்துச் சைவசமயிகளாகிய நாம் பெருமைப்படலாம்.

''சங்கரர் காட்டிய சைவநெறி'' என்பது பற்றிப் பேசத் தொடங்கு முன், சங்கராச்சாரிய சுவாமிகளைப்பற்றி எமது ஈழத் திருநாட்டிலுள்ள ஒரு சிலரிடத்து நிலவும் ஒரு தப்பான கருத்தை விளக்குதல் எனது கடமையாகும். அது வருமாறு:—

ஆன்மாக்களின் இறுதியான இலட்சியம் நிலையான இன்பம் பெறுதலேயாம். பரம்பொருளாம் இறைவனை அடைதலே நிலையான இன்பம் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. அந்தப் பேரின்பத்தை அடைவதற்கு வேதாந்தம், சித்தாந்தம் என இரு வழிகள் கூறப்படுகின்றன. அவற்றுள் எது சிறந்தது என்பதிலேயே ஒரு சிலரிடத்துக் கருத்து வேறுபாடு அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேதாந்தம்' என்பது பரந்த பெரிய வழி. 'சித்தாந்தம்' என்பது சுருங்கிய கிட்டிய வழி.

ஒரே இடத்தை அடைவதற்குரிய இரு வழிகளுள் பரந்த பெரிய வழியே செல்பவனுக்குச் சிறிது காலதாமதம் ஆகலாம். ஆனால், ஆபத்து ஒன்றும் நேராது. அதே இடத்தை அடைவதற்குச் சுருங்கிய வழியே செல்பவன் குறித்த இடத்தை விரைவில் அடையலாம். ஆனால் அதிலே சிறிது தவறினாலும் ஆபத்துக்கள் நேரலாம். இதுவே, வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் இடையேயுள்ள அடிப்படையான வேறுபாடு என்பது தமியேனது கருத்து.

சாயுச்சிய முத்தி என்பது ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலத்தல். இது இரு அந்தங்களுக்கும் உடன்பாடேயாம். சங்கராச்சாரிய சுவாமிகள் நிலைநாட்டிய வேதாந்தக் கொள்கையின் உண்மையை உணராதவர்கள், அவரை மாயாவாதி என்றும், ஏகான்மவாதி என்றுங் கூறிக் கருத்து மாறுபடுவர்.

பதி, பசு, பாசம் என்பன நிலையான மூன்று பொருள்கள். அவை திரிபதார்த்தங்கள் எனச் சொல்லப்படுவன. பதி – இறைவன், பசு - ஆன்மா, பாசம் - மாயை. பசுவைப் பதியோடு சேரவொட்டாமல் தடுப்பது பாசம். பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாவை விட்டுப் பாசம் விலகிவிட, பசு, பதியை அடைந்து விடுகிறது. சீவன் சிவமயமான பின் வேறு பிரித்தறிய முடியாதது என்கிறது வேதாந்தம். சீவன் சிவமாயபின் வேறு பிரித்தறிய முடியாவிட்டாலும் இறைவன் திருவடியையே அடைகிறது என்கிறது சித்தாந்தம். வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் கூறும் வழி வேறாகத் தோற்றினாலும் இறுதி முடிபு ஒன்றேயாம். எனவே இவையிரண்டிலும் எது சரி எனக் கேட்பது, வெல்லக் கட்டியினால் அமைந்த பிள்ளையாரில் எந்தப் பாகம் இனிக்கும் எனக் கேட்பதையே ஒக்கும்.

ஆகவே, எமது அறியாமை காரணமாக, சங்கராச்சாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளை மாயாவாதியென்றோ, ஏகான்மவாதியென்றோ வெறுத்து ஒதுக்கி விடாமல், அவர் நிலைநாட்டியது சைவ சித்தாந்தத்தை உள்ளடக்கிய சுத்தாத்துவித வைதிக சைவ மதம் எனக் கொண்டு போற்றுவதே பொருத்தமாகும்.

இன்னுமொரு சாரார், சங்கராச்சாரியரை வேறொரு வகையில் வெறுப்பர். அதாவது:- அவர் விஷ்ணுவையும் பரம் பொருளெனக் கூறுகிறார். அதனால், அவர் சிவபிரானுக்குப் பூரண பரத்துவம் கொடுக்கவில்லை என்பது அக்குறையாகும். இப்படிச் சொல்பவர்கள் 'சிவ' என்ற சொல்லின் பொருளை அறியாதவர் என்றே சொல்லலாம்.

'சி' கரம் பதியெழுத்து. 'வ' கரம் பரையெழுத்து. 'சிவ' என்ற சொல்லிலேயே அம்மையப்பராகிய இறைவன் என்ற கருத்து இருக்கிறது. 'விஷ்ணு' என்ற சொல்லுக்கு வியாபகம் - நிறைவு என்பது பொருள். அந்த நிறைவே சிவசக்தியாம். பரம்பொருளாம் எனக் கூறும்போது சிவமும் சிவசக்தியும் ஒன்றுபட்ட நிலையே கருதப்படுகிறது.

எனவே, சங்கராச்சாரியர் விஷ்ணுவைக் குறித்துக் கூறியவை யெல்லாம் சிவசக்தியைக் கருதுவதாகவே அமையும். மேலும் எந்தச் சைவனும் விஷ்ணுவை வேறாக ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில், சிவபக்தர்களுள் மிகச் சிறந்தவர் விஷ்ணு ஆவர். மெய்யடியார்களின் உள்ளத்தில் உறைபவர் சிவபரம் பொருள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

'சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு, விஷ்ணுாசஸ் ஹ்ருதயம் சிவ:'
என்றும்

'மத் பக்த: சங்கரத்வேஷீ, மத்வேஷீ சங்கரப்ரிய:
தாவு பௌ நரகம் யாந்தி'
என்றும் கூறப்படுகின்றன.

குறுகிய மனப்பான்மை கொண்ட ஒடுங்கிய புத்தியை நீக்கிவிட்டுச் சிறிது பரந்த நோக்குடன் சிந்திப்போமாயின் சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் உண்மைநிலை தெளியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தாம் வாழும் வகையறியாமல் இடர்ப்படும் போதெல்லாம் இறைவன் ஆன்மாக்களிடத்தே கொண்டதடைப்படாப் பெருங் கருணையினாலே, தமது திருவருளின் திறத்தால் அவதார புருஷர்களைத் தோற்றுவித்து, அவர்கள் மூலமாக மக்களை வழிநடத்தி அருளுகிறார்.

அந்த அருள் நெறியின் வழிவந்தவர்களே சைவசமய குரவர்கள் என்றும்; சந்தான குரவர்கள் என்றும் போற்றப்படுகின்றனர். அந்த வரிசையில் வைத்துப் போற்றப்பட வேண்டிய அவதார புருஷரே சங்கராச்சாரிய சுவாமிகளுமாவர்.

அவதார புருஷர்கள் துறவிகளாகவே தான் இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. இல்லறத்தை மேற்கொண்டவர்களுள்ளும் பலர் சிறந்த வழியை எமக்குக் காட்டியுள்ளனர். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலானோர் இல்லறத்தை அனுட்டித்தும் அதிலே அழுந்தி விடாமல் இறைவழிபாட்டை மேற்கொண்டு எமக்குவழிகாட்டியுள்ளனர். திருநாவுக்கரசு நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்போர் துறவறத்தையே பின்பற்றி வாழ்ந்து காட்டியுள்ளனர். எமது சங்கராச்சாரிய சுவாமிகளும் துறவியாகவே வாழ்ந்து எமக்கு வழிகாட்டியுள்ளார். சிறந்த சைவ நெறியைக் கடைப்பிடித்து வாழுவதற்கு இல்லறந் தடையானது அல்ல என்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன்.

துறவறத்தை மேற்கொள்பவர்கள் உண்மையிலேயே பற்றற்றவராதல் வேண்டும். பற்றுள்ள துறவறத்தினால் ஒரு பயனுமில்லை. அது போலித் துறவு. சங்கராசாரிய சுவாமிகள் மேற்கொண்ட துறவு மெய்த்துறவு. உண்மையான துறவியை அவனது பிதாவும் வந்து வணங்கவேண்டும். ஆனால், எந்தத் துறவியானாலும் தன்னைப் பெற்ற தாயைத் தானே சென்று வணங்க வேண்டுமேயன்றித் துறவியாகிய மகனைப் பெற்ற தாய் வணங்கலாகாது. சங்கராச்சாரியர் தம்மைப் பெற்ற தாயாகிய 'ஆர்யாம்பிகை' என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அம்மையார் வேண்டிக் கொண்டபடி அவரது அந்திய காலத்தில் வந்து தாய்க்குரிய ஈமக் கடன்களை நிறைவேற்றினார் என்பது வரலாறு.

உண்மையரன சைவநெறி என்பது இறைவனை அன்னையும் அப்பனுமாகப் போற்றி வழிபடுதலேயாம். சர்வலோகைக நாயகரஈகிய சிவபிரானது திருவருளைப் பெறுவதற்குச் சுலபமான வழியாவது சிவசக்தியின் மூலமாகப் பெறுவதேயாம். இதற்காகவே ஆதிசங்கராச்சார்ய சுவாமிகள் சிருங்ககிரியில் சாரதா பீடத்தை அமைத்து வழிகாட்டினார்கள். துங்கபத்திரை நதிக்கரையில் தலையிலே கொம்பு முளைத்த இருஷ்ய சிருங்க முனிவர் இருந்த இடம் சிருங்ககிரி எனப் பெயர் அமைந்து, பின்பு அது மருவி சிருங்கேரி என்றாயிற்று.

பின்பு ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்தல யாத்திரை செய்து ஆங்காங்கு பல மடங்களை நிலைநாட்டினார். பல அற்புதங்களையும் செய்து காட்டினார். அவ்வாறே காஞ்சீபுரத்துக்கு வந்து காமகோடி பீடத்தையும் அங்கு ஸ்தாபித்தார். காமாட்சி சந்நிதியில் ஸ்ரீ சக்கிரப் பிரதிஷ்டை செய்தார்கள். இறுதியில் அவர்கள் அங்கேயே அடைந்தார்கள். அவரது சந்நிதியை இன்றும் அங்கே தரிசிக்கலாம்.

சுவாமிகள் உலக நன்மையின் பொருட்டுப் பல நூல்களை இயற்றியுள்ளார்கள். அவை:- கனகதாராஸ்தவம், தசஸ்லோகி, விவேக சூடாமணி, பிரபோத ஸீதாகரம், ஆத்யபோதம், மனீஷா பஞ்சகம், உபதேச சாஹஸ்ரீ, பஜகோவிந்தம் என்பன.

இன்னும், ஸ்ரீ பிரச்னோத்தர ரத்தினமாலிகா, துவாதச பஞ்சரிகா ஸ்தோத்திரம், அம்பாஷ்டகம், மீனாட்சி பஞ்சரத்தினம், சியாமளா நவரத்தினமாலிகா, திரிபுரசுந்தரீ ஸ்தோத்திரம், அன்னபூரணி ஸ்தோத்திரம், சீதலாஷ்டகம், ஸ்ரீமாத்ரு புஷ்பமாலா ஸ்துதி, தேவ்யபராத க்ஷமாபண ஸ்தோத்திரம், சிவமானச பூஜை, சிவபஞ்சாக்ஷர ஸ்தோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம், விசுவநாதாஷ்டகம், வேதசார சிவஸ்தோத்திரம், சிவநாமாவளி அஷ்டகம், ஹரிஸ்துதி, விஷ்ணுஷட்பதி, காசிபஞ்சகம், ஆத்மபஞ்சகம், அபரோக்ஷானுபூதி, விஞ்ஞான நௌகா, ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்தோத்திரம், ஆனந்த லஹரீ, சிவபுஜங்க ஸ்தோத்திரம், மோகமுக்கரம். கணேச பஞ்சரத்தினம், சுப்பிரமணிய புஜங்க ஸ்தோத்திரம், பவாநி புஜங்கம், ஸ்வாத்ம நிருபணம் முதலியனவும் ஆதிசங்கராச்சாரிய ஸ்வாமிகளால் இயற்றப்பட்டனவாகக் கூறப்படுகின்றன. இவை அவருக்குப் பின் குருபரம்பரையில்பீடமேறிய சங்கராச்சாரியர்களாலும் இயற்றப்பட்டிருக்கலாம் எனவும் கூறுவர்.

ஆசாரிய ஸ்வாமிகள் காட்டிய சைவ நெறி மேலே குறித்த நூல்களிலிருந்து நன்கு புலப்படுகின்றன. திருச்செந்தூர் முருகப் பெருமான் மீது பாடிய சுப்பிரமணிய புஜங்கம் வடமொழிச் சந்தத்தை அநுசரித்துத் தமிழாக்கம் செய்து தமிழில் பொருள் விளக்கத்துடன் புத்தக வடிவில் இரு ஆண்டுகளுக்கு முன் வெளியிடத் திருவருள் கூட்டியது. ஸ்ரீ பிரச்னேத்தர இரத்தினமாலை தமிழில் வசன ரூபமாக்கப்பட்டுச் சென்ற சில வாரங்களாக 'ஈழநாடு' வார மலரில் வெளிவந்திருக்கிறது. மதுரை மீனுட்சியம்பிகையைக் குறித்து ஸ்வாமிகள் இயற்றியருளிய மீனுட்சி பஞ்சரத்தினம் என்பதிலுள்ள ஐந்து மணியான தோத்திரப்பாடல்களையும் திருவருள் வசத்தால் தமிழாக்கம் செய்யப்பெற்றபடி இச் சபையில் சமர்ப்பித்துத் தமியேனது சிற்றுரையைப் பூர்த்தி செய்ய விரும்புகிறேன்.

# மீனுட்சி பஞ்சரத்தினம் தமிழாக்கம்

உதிக்கின்ற சூரியர் ஓராயிரங்கோடி
 ஒளிகொண்ட மேனியாளை
மதிக்கின்ற தோளணியு மாலைபுன் முறுவலொடு
 மஞ்சல்நேர் ஆடையாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கின்ற வன்விண்டு சதவேள்வி யன்தேவர்
வீழ்ந்துபணி தத்வ சிவையைக்
கதிக்கின்ற ருள்கயற் கருணையங் கண்ணியைக்
காலமெல்லாம் பரவுவாம். 1

முத்தார மார்பொளிர முடிகொண்டு கோலோச்சும்
முழுமதி முகத்தினளைக்
கத்துமணி கொண்டபொற் காலணிகள் கிண்கிணெண
கால்கொள் பூப்பொலிவினளை
எத்தாலும் இனிதருளும் மலைமகளை வாணியும்
இரமையும் போற்றுவாளை
வித்தார மாகவருள் விளைகயற் கண்ணியை
வேண்டியாம் பரவுகிற்பாம். 2

ஸ்ரீவித்தை யுருவாகிச் சிவனரிடங் கொண்ட
செப்புவற் றீங்கார வொளியாள்
ஸ்ரீசக்ர மத்தியிற் சேர்விந்து வடிவாகுஞ்
சீர்சபா நாயகி யருட்
ஸ்ரீமன்னும் அறுமுகச் செம்மலைங் கரனுக்குஞ்
சீரன்னை யுலகன்னையாம்
ஸ்ரீதரன் தங்கையாய் சேர்கயற் கண்ணியைச்
செப்பியாம் போற்றி செய்வாம். 3

சுந்தரர் தேவியே சூழ்பயம் போக்குமுன்
சொல்ஞான நல்கு நிமலே
எந்தை மகிழ்சாமளை எண்ணிவிதி ஏத்தவருள்
எழில்மேவு மால் தங்கையே
சந்தமுறு வீணைமிரு தங்கவிய வேணுவும்
சாரச் சுவைக்கு மன்னாய்
பந்தமறு பார்வையருள் அங்கயற் கண்ணியுன்
பாதமலர் போற்றி போற்றி. 4

பலயோகி முனிவரர் பரவுமல ருள்ளத்துப்
பலசித்தி தந்தருளுவாய்
பலவான மலர்கொண்டுன் பதமலர் சேவிக்கும்
பச்சைமாற் கருளு பரையே
பலநாத தத்துவப் பரமான பிரமமே
பராபரை எழிற் சோதியே
பலநோக்கி யங்கயற் கண்ணியுன் பாதமலர்
பரவுதும் போற்றி போற்றி. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்தரின் அருளுரைகள்

ஓம் என்பதே வாழ்வின் மிகச் சிறந்த கூட்டாளி ஏனெனில் அது உனக்குத் தெய்வத் தன்மையையும் நித்தியானந்தத்தையும் அளிக்கிறது.

ஆத்மானுபூதி கோழைகளுக்கும் திடசித்தமில்லாதவர்களுக்கும் அன்று; ஆனல், அது தீரருக்கும் துணிவுடையோருக்கும் திடமுள்ளோருக்குமே.

கடவுள் அனைத்தையும் அருள்கிருர்; ஆனல், அவர் தமது பக்தர்களுக்குப் பக்தி அல்லது பற்றுறுதி அருளுவதில் மிகப் பெரும் உலோபி.

இவ் வியக்கத் தகுந்த உலகம் ஒரு பெரும் அறிவுக் கலாசாலே. உனது படிப்பினைகளைப் படித்து விவேகமுள்ளவனுகு.

உனது சுவையையும் புலன்களையும் திருப்தி செய்ய வாழாதே; ஆனல், அகத்தேயுள்ள ஆன்மாவை அனுபூதியடைய வாழ்க.

ஒவ்வொன்றிலும் மிதமே யோகசித்திக்கு அடிப்படைக் கருத்து.

திருத்தொண்டர்களுடனும் ரிஷிகளுடனும் தொடர்பு பெறுவது கடினம். அவர்கள் அணுக முடியாதவர்கள். அவ்வகையான தொடர்பு தனது பயனிற் தவருது.

தெய்வீகத்தில் வாழ்க. அதில் வாழ்ந்து நடமாடுக. தெய்வீக உணர்ச்சியில் இலயப்படுக.

ஆன்மிக ஆற்றலின் முக்கிய நிபந்தனை இழிவான தன் முனைப்பை அழித்தலும் புலவின்ப விருப்பத்தைக் களைதலுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

## அரிய ஆத்மீக நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கூட்டு வழிபாடு | .30 |
| 12 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 13 | நித்திய கரும விதி | .25 |
| 14 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 15 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 16 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 17 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 18 | திருநீற்றின் பெருமை | .10 |
| 19 | நாவலர் நாடகம் - மகரிஷி சுத்தானந்தர் | 2.00 |
| 20 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 21 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 22 | பக்தி | .20 |
| 23 | கோபம் | .20 |
| 24 | பிரமம் | .20 |
| 25 | அவதாரம் | .20 |
| 26 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 9 - 10 | .50 |

தபாற் செலவு தனி.

**வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.**

## ஆத்மஜோதிநிலையம், நாவலப்பிட்டி

(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 19 ஆண்டுகள் பூர்த்தியாகி 20வது ஆண்டு ஆரம்பமாகி 10 இதழ்கள் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினுலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தியாவில் உள்ளவர்கள் தங்கள் சந்தாவை
வழக்கம்போல்

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்.**
அரிசிப்பாளையம். சேலம்—9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்து இவ்விடமும் அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,
## நாவலப்பிட்டி, (இலங்கை)

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 16–8–68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org